# *புனித ஒலிம்பியாஸ் (368 – 410)*

இவள் 368-ஆம் ஆண்டில் பிறந்தாள். இவளுக்கு தெய தோசியா என்னும் பெண் பயிற்சியளித்து, இவள் புனிதையாக வாழ உதவி செய்தாள். இளவயதிலேயே இவள் மணமுடித்தாள். கணவரின் பெயர் நெப்ரிதியுஸ். இவர் மாகா தெயதோசியுஸ் பேரரசரின் பொக்கிஸத்தாராக இருந்தார். மணமுடித்த இருபது நாட்களுக்குப் பின் அவர் இறந்தார். இரண்டாவது முறையாக மணமுடிக்க இவளை வற்புறுத்தினார்கள். இவள் இணங்கவில்லை.

கொன்ஸ்தாந்திநோபிள்ஸ் நகரில் வாழ்ந்து வந்த இவள் பிறருக்கு அன்புச் செயல்கள் செய்வதில் ஈடுபட்டாள். தன் பணத்தையெல்லாம் ஏழைகளுக்கும் கோவில்களுக்கும் கொடுத்தாள். இவளுக்கு நோய்கள் பல வந்தன. பிறரும் இவளை துன்புறுத்தினார்கள். அந்நகரின் பிதாப்பிதா இவளுக்கு கோவிலில் ஓர் உயர்ந்த வேலை கொடுத்தார். 398-ஆம் ஆண்டில் அந்நகரின் பிதாப்பிதாவாக இருந்த புனித கிறிசோஸ்தம் இவளை மிக மதித்து வந்தார். அவர் 404-ஆம் ஆண்டில் நாடு கடத்தப்பட்டார். ஒலிம்பியாஸ் அவரை ஆதரித்துப் பேசினாள். எனவே அவருடைய எதிரிகள் இவளைத் துன்புறுத்தினர். இவளும் நகரை விட்டு வெளியேறினாள்.

405-ஆம் ஆண்டில் இவள் கொன்ஸ்தாந்திநோப்பிள்ஸ் நகருக்குத் திரும்பினாள். நகரின் அதிகாரி இவளுக்கு பெருந்தொகையை அபராதமாக விதித்தான். பிரிவினை ஆயரோடு தொடர்பு கொள்ள இவள் இணங்கவில்லை. எனவே இவளுக்கு எண்ணமுடியாத தொல்லைகள் வந்தன. இவளின் கீழ் இருந்த கன்னியர்களும் பின்னர் சிதறடிக்கப்பட்டனர்.

புனித கிறிசோஸ்தம் இவளுக்கு பல கடிதங்கள் எழுதி இவளைத் தேற்றி ஊக்குவித்தார். இதற்கு கைம்மாறாக பெருந் தொகையான பணத்தை அவருக்கு இவள் அனுப்பினாள். அந்தப் பணத்தைக் கொண்டு அநேக கைதிகளை மீட்டார். 410-ஆம் ஆண்டையொட்டி இவள் இறந்தாள்.

**சிந்தனை:**

இப்புனிதையின் உதவியால் அநேக கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். அழிந்து போகும் பொருட்களைக் கொண்டு பரலோகத்தில் அழியாத செல்வங்களை இவள் சேகரித்தாள்.

**செபம்:**

ஆண்டவரே, நீர் தரும் நேரத்தை பயன்படுத்தி ஏராளமான நன்மை செய்யும் வரத்தை எங்களுக்குத் தாரும்.